மதராஸ் யுனைடெட்
ஆர்டிஸ்ட்ஸ்
கார்ப்பொரேஷன்
தயாரிப்பு
டைரக்ஷன்
கே. சுப்ரமண்யம், பி.ஏ., பி.எல்.,
& ஸி.எஸ்.வி. ஐயர்
கச்ச
தேவயானி
தமிழ் புராணப் படம்
மதராஸ் யுனைடெட்
ஆர்டிஸ்ட்ஸ் நடித்தது
ஜெமினி
ரிலீஸ்

கச்ச தேவயானி

தமிழ் புராணப் படம்

தயாரிப்பு:
மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன்

கதை, வசனம்
கே. சுப்ரமண்யம், பி.ஏ., பி.எல்.

டைரக்ஷன்
கே. சுப்ரமண்யம், பி.ஏ., பி.எல்.
& ஸி. எஸ். வி. ஐயர்

உதவி டைரக்ஷன்
டி. வி. நீலகண்டம், பி.ஏ., பி.எல்.
கொத்தமங்கலம் சுப்பு
கே. ஜே. மகாதேவன், பி. ஏ.
எம். ஆர். எஸ். மணி

சங்கீத டைரக்ஷன்
வித்வான் வி. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார்

சங்கீத கவனம்
பாபநாசம் சகோதரர்கள்
(பி. ஆர். சிவன் & பி. ஆர். ராஜகோபாலய்யர்)

ஆர்க்கெஸ்ட்ரா
மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கர்னடிக் ஆர்க்கெஸ்ட்ரா

மதுரை ஜில்லாவுக்கு ஸப்-டிஸ்ட்ரிபியூட்டர்கள்: **ஸ்ரீ ராமா பிக்சர்ஸ், போடிநாயக்கனூர்**

விநியோகம்: **ஜெமினி பிக்சர்ஸ் ஸர்க்யூட்**
சென்னை - மதுரை - எர்ணகுளம்

KACHA DEVAYANI

SYNOPSIS

THERE was rejoicing in Indra's Court and the Devas indulged in promiscuous pleasures after their victory over the Asuras. Indra was the most proud of them all and his voice rang with boastful bravado when he recounted to Narada the rout he had put his foes to. But Narada was diffident and there was good reason for his diffidence.

For, Vrishaparva, the Asura chief, had sought the help of his Guru Sukracharya, and the latter had used 'Mritha-sanjeevini,' a mantra that can bring the dead to life. All the rakshasas that had ceased to exist from time immemorial had now sprung to life. The Asura horde now came upon the unprepared Devas and worked havoc among them. Taken completely unawares the Devas fled pell-mell in confusion. Shorn of his crown Indra fled for his life and fell at the feet of Brihaspathi and begged him to assist to overcome the enemy.

Brihaspathi deliberated and sent his son, named Kachan, to go to the earth and learn from Sukracharya the mantra, "Mrithasanjeevini." The wary Indra had still a doubt in Kachan and consequently he elicited an oath from him that he would not succumb to the beauty of womankind in the course of his mission on earth.

Devayani, the fair daughter of Sukracharya, cherished no love for the misdeeds of the Asuras. This attitude made Vrishaparva uneasy and, in order to cement his friendship with his Guru, he sent Madanasura to make love to Devayani and win her affections. Now, Madanasura was a wanton idiot and naturally he got only a whack from a whip from the object of his attraction for all his pains.

At this time Kachan came to the earth and met Devayani in strange circumstances. A stone that she pelted at Madanasura missed him and struck Kachan, who fell in a faint. Horrified at this unexpected turn, Devayani hurried to minister him with attentions and love was born between the youthful pair. But, Devayani without tarrying to reveal her name fled away to her home.

Kachan approached Sukracharya with the request to take him for a disciple, frankly setting forth his purpose. Sukracharya declined; but, when Kachan pointed out the injustice of rejecting him, Devayani pleaded on his behalf and Sukracharya consented.

Vrishaparva, intimated of Kachan's arrival and purpose by the sage Narada, was disturbed and he sent Madanasura again to Devayani. But Madanasura's purpose was foiled by his mistress, Simmasani. Kachan, who overheard the conversation between the two, mistook Devayani to be intriguing with the Asura and treated her with contempt and scorn.

The Asuras carried Kachan bodily and threw him into the sea to end him. Vrishaparva hurried to Sukracharya feigning grief at the mistake of his subordinates. Devayani, who was certain that mischief of Asuras alone was responsible for Kachan's death, persuaded her father to bring him back to life, which he did.

The Asuras did not give up their attempt. They burnt Kachan and mixed his ashes in Sukracharya's drink. The complex now arose that even if the 'Mrithasanjeevini' was employed, only one could live—Kachan or Sukracharya. Devayani pleaded again for her lover. He came out killing his Guru on the spot. However, he effectively used the "Mrithasanjeevini" again and restored the Guru to life.

Having thus accomplished his purpose of learning the mantra, Kachan turned his eyes towards Heaven. Devayani's eyes brimmed with tears and her heart was wrung at the thought of separation from him. But Kachan remembered his promise to Indra and rejected her love. The force of her affections turned to a rage of disappointment and she pronounced a terrible curse that, as her love for him had turned, his mantra also would bear no fruit!

All efforts and pains were thus lost and the Devas were again in the same plight. In their despair they prayed to Lord Siva, who advised them to look to Lord Vishnu, who consequently brought them immortality through "Amrita."

கச்ச தேவயானி

கதைச் சுருக்கம்

இந்திர லோகத்தில் குதூகலம் பொங்கியவாறு இருக்கிறது. நாட்டியங்களும் கேளிக்கைகளும் அபரிமிதமாகவே காண்கின்றன. அஸுரர்களைத் துவம்ஸம் செய்து வெற்றி மாலை சூடிய தேவர்கள் தங்கள் ஜயத்தை இப்படிக் கொண்டாடுகிறார்கள். நாரத முனிவரிடம் தேவேந்திரன் இறுமாப்புடன் தன் பராக்கிரமத்தைத் தற்பெருமை தோன்றக் கூறிவருகிறான். அவன் மமதையைக் கண்ட முனிவரும் தலையை அசைத்துவிட்டுச் செல்லுகிறார்.

தோல்வியுற்ற அஸுரன் விருஷபர்வா சுக்ராச்சாரியைப் பணிந்து அவருடைய உதவியைக் கோருகிறான். "மிருதஸஞ்சீவினி" என்னும் மந்திரத்தின் சக்தியினால், யுகாந்த காலந்தொட்டு மாண்டு போன ஸகல அஸுரர்களும் உயிர்பெறுகிறார்கள். சற்றும் எதிர் பாராத சமயத்தில், அவர்கள் தேவர்களைத் தாக்கி அவர்களை நாலாபுறமும் சிதறி ஓடச் செய்கிறார்கள். எங்கும் கூச்சலும், கதறலும், கூக் குரல்களுமாகவே இருக்கின்றன. மணிமுடி பறிக்கப்பட்ட இந்திரன், தேவ குருவான பிரகஸ்பதியைப் பணிந்து, ஒரு மார்க்கம் கூறும்படி வேண்டுகிறான். அதன் பிரகாரமே, பிரகஸ்பதியின் புதல்வனான கச்சன் பூலோகத்திற்கு வந்து, அஸுர குருவான சுக்ராச்சாரியாரிடம் "மிருதஸஞ்சீவினி" யைக் கற்றுக்கொள்வ தென்று முடிவு செய் கிறார்கள். பூலோக மாயையிலும் ஸ்திரீகள் வலையிலும் சிக்குவதில்லை என்ற பிரதிக்ஞையுடன் கச்சன் கிளம்புகிறான்.

சுக்ராச்சாரியாரின் புதல்வியான தேவயானிக்கு அசுரர்களின் செய்கைகள் திருப்தி அளிக்கவில்லை. அவள் மூலமாக குருவின் மனஸ்தாபம் நேர்ந்து விடாமல் பாதுகாக்க, விருஷபர்வா தனது மைத்துனனான மதனசுரனை அனுப்பி, தேவயானியைக் காதல் புரியச் செய்கிறான். மதுவிற்கு அடிமையும் உன்மத்தனுமான மதனஸுர னுக்கு காதலென்றால் தெரியாது. அவன் ஒரு தபஸ்வியின் வேஷத் துடன் பூங்காவில் வந்து உட்கார்ந்து, தேவயானி வரும் சமயத்தில் "தேவயானி! தேவயானி!" என்று வாய்விட்டு ஜபித்துக் கொண் டிருக்கிறான். மானைப்போல் துள்ளிக் குதித்துக்கொண்டு ஆடிப் பாடிவரும் தேவயானி, தன் பெயரை உச்சரித்தவாறு இருக்கும் மதன சுரனைக் கண்டு விடுகிறாள். அவன் வாயினால் தன் பெயரை உச்சரிப் பதுகூடத் தனக்கு அசுசி என்று எண்ணி, ஒரு பூங்கொடியை எடுத்து அடிக்கிறாள். கண் விழித்த மதனசுரன் தன் காதலை ஆட்டபாட்டங்

களுடன் வெளியிடுகிறான். தேவயானி அவ்விடத்தை விட்டு ஓடி மறைகிறாள்.

* * * *

பிரகஸ்பதியின் புதல்வனான கச்சன் பூலோகத்தில் முதன் முதலாகப் பிரவேசித்தான். இயற்கைக் காட்சிகளின் வனப்பு அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. மெய்ம் மறந்து வரும் கச்சன்முன், ஒரு பொய்கையின் புறமாக, கானத்தில் லயித்து நின்றாள் தேவயானி. இருவருக்கும் நடுவே குபீரென்று குதித்த மதனாசுரன், மறுபடி தன் காதலைச் சொல்லி, அவளை வற்புறுத்தினான். கோபம் கொண்ட மங்கை, ஒரு கல்லை எடுத்து அவன் மீது வீசினாள். மதனாசுரன் மறையவே, கல் குறி தவறி கச்சன்மீது பட்டு, அவன் மூர்ச்சையடைந்தான்.

எதிர்பாராமல் ஏற்பட்டு விட்டதைக் கண்ட தேவயானி பதைபதைத்து ஓடிச் சென்று, கச்சனைத் தூக்கி, மடியில் போட்டுக் கொண்டு ஆசுவாசப்படுத்தினாள். கண் விழித்த கச்சன், தேவயானியின் சுந்தரமான முகத்தைப் பார்த்தான்; தேவயானியும் அவனது தெய்விக சௌந்தரியத்துக்கு இதயத்தை ஒப்படைத்து விட்டாள். காதலின் ஜனனத்தினால், கச்சன் மனதைக் கட்டுப் படுத்த மாட்டாமல் தவித்தான். இந்திரனுக்கு அளித்து வந்த பிரமாணம் ஞாபகம் வந்ததும், அவளிடம் தன் வரலாற்றைக் கூறினான். ஆனால் அவளைப் பற்றி விசாரிக்கத் தொடங்கியதும், அங்கே நிற்காமல் ஓடி மறைந்து விட்டாள்.

சுக்ராச்சாரியாரின் ஆசிரமத்தைத் தேடிக்கொண்டு சென்றான் கச்சன். ஆசிரம வாசலில் உட்கார்ந்து, குட்டிச்சாத்தானை உபாசித்துக் கொண்டிருந்தார்கள் இரு சிஷ்யர்கள். தேவ குமாரன் அங்கே தோன்றியதும் சிஷ்யர்கள் அவன்தான் குட்டிச் சாத்தானென்று நினைத்து அவன் காலில் விழுந்து பணிந்தார்கள். ஆனால், அவன் தான் யாரென்று கூறி, வந்த காரியத்தையும் தெரிவித்தபோது, அவர்கள் அவனை வழி மறித்து விரட்டப் பார்த்தார்கள். அந்த சமயம் சுக்ராச்சாரியார் வாசலில் வரவும், கச்சன் அவரை வணங்கி, தன் விருத்தாந்தத்தைச் சொன்னான். அவர் முழுதும் கேட்டு விட்டு, தற்காலத்துக்கு அவனைச் சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள சாத்தியம் இல்லையென்று கூறினார். மனம் சலிப்படைந்தவனாகக் கச்சன், "வித்யா தானம் செய்யத் தயங்குவது பெரியோருக்கு அழகல்ல" என்று திரும்பியபோது, தேவயானி அவன்பால் இரங்கித் தந்தையை சம்மதிக்கச்

 K·M·T

செய்கிறாள். விருஷபர்வாவினிடம் நாரத முனிவர் வந்து, தேவலோகத்திலிருந்து கச்சன் பிரகஸ்பதியால் அனுப்பப்பட்டிருப்பதையும், சுக்ராச்சாரியாரிடம் அவன் மந்திரோபதேசம் பெற வந்திருப்பதையும் கூறி விட்டுச் சென்றார். இந்தச் செய்தியினால் மனங் கலங்கிய அசுரன், மறுபடி மதனாசுரனை அனுப்பி தேவயானியை வசப்படுத்தச் சொல்கிறான். கச்சனை ஒழிப்பதற்கும் சூழ்ச்சிகள் செய்யலானான்.

மதனாசுரனுக்கு ஏற்கெனவே ஒரு காதலி இருந்தாள். அவள் பெயர் சிம்மாசனி. மதனாசுரனுடைய போக்கையும் கருத்தையும் அறிந்த அவள், மதனாசுரனைப் பின் தொடர்ந்து சென்றாள். இந்த சமயத்தில் கச்சனும், சுக்ராச்சாரியாரின் மூட சிஷ்யர்களிட மிருந்து, தேவயானிக்கும் மதனாசுரனுக்கும் விவாகம் நடக்கு மென்று கேள்வி யுற்றுக் கலங்கினான். மனம் புழுங்கி, கால் சென்ற வழியே செல்லும் போதுதான், மதனாசுரன் தேவயானியைப் பல முறைகளிலும் அவன் விருப்பத்துக்கு இணங்க முயற்சி செய்து பார்த்தான். சிம்மாசனி குறுக்கிடவே, தேவயானி அந்த அசுரனிட மிருந்து தப்பி ஓடினாள். பிறகு சிம்மாசனியின் விருப்பப்படி மதனாசுரனும் தேவயானியிடம் காதல் புரிந்தது போலவே நடித்தான். இவ் வார்த்தைகள் காதில் விழுந்த கச்சன், தேவயானியிடம் வெறுப்படைந்தான். பின்னர் அவள் அவனிடம் பேச வந்தபோதும், இடங் கொடாமல் அவள் கன்னத்தில் அடித்து விட்டான். அந்த சமயத்தில் பின்புறமாக வந்த பல அரக்கர்கள் அவனைத் தூக்கிச் சென்று, கொன்று, கடலில் வீசி விட்டார்கள்.

அலறிக்கொண்டு சென்ற தேவயானி, தந்தையின் காலில் விழுந்து மன்றாடினாள். கச்சனை உயிர்ப்பித்தால்தானாச்சு என்று கதறினாள். தந்தையும் இணங்கினார். 'மிருத ஸஞ்சீவினி'யினால் திரும்ப உயிர் பெற்ற கச்சன், கடலினின்று வந்து குருவைப் பணிந்தான்.

கச்சன் உயிர் பெற்றதைக் கேள்வியுற்ற விருஷபர்வாவின் கோபம் பன்மடங்கு அதிகரித்தது. எப்படியாவது கச்சனை ஒழித்து விடக் கங்கணம் கட்டிக் கொண்டான். அதன் பிரகாரம், அவன் சுக்ராச்சாரியாரிடம் நேரில் சென்று, கச்சனைத் தனது சகாக்கள் கொன்றதற்குத் தான் மிக வருந்துவதாகக் கூறினான். தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு, அவன் மீண்டும் உயிர் பெற்றுத் தன்னை பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுவித்ததற்காகவும், மேலும் அவருடைய அனுக்கிரஹத்திற்காகவும் பாத பூஜை செய்யப்போவதாக அழைத்தான். குருவும் சம்மதித்தார்.

வெகு விமரிசையாக நடந்தது பாத பூஜை. ஆசார்யருக்கென்றே பிரத்தியேகமாக சிரத்தையுடன் தயாராகி யிருந்த மதுவில், கச்சனைச் சுட்டெரித்த சாம்பலை விருஷ பர்வா கலந்திருந்தான். கடலில் போட்டால் அழைக்கலாம்; குக்ஷியில் சேர்ந்தபின் அழைக்க முடியாதல்லவா?

ஆசிரமத்திலே காதலனைத் தேடி அலைந்துகொண் டிருந்தாள் தேவயானி. ஏதோ சூது நடந்திருக்க வேண்டுமென்று நாரதர் மூலம் அறிந்த தேவயானி, தந்தை வந்ததும் கதறினாள். சுக்ராச்சாரியார் ஞானதிருஷ்டியின் மூலம் கச்சனுடைய கதியை அறிந்தார். ஆனால் அவனைப் பிழைப்பு மூட்ட முடியாத நிலைமையில் செயலற்று நின்றார். கச்சன் வெளியே வரவேண்டு மென்றால், சுக்ராச்சாரியார் மாண்டு போக வேண்டும்! இந்த தர்மசங்கடத்தில் தத்தளித்த தந்தையிடம் தேவயானி ஓர் உபாயம் கூறினாள். "மிருத ஸஞ்சீவினி"யால் உயிர்ப்பிக்கப்பட்ட கச்சனுக்கு அந்த மந்திரத்தை உபதேசம் செய்வித்து சித்தி யடையும் சக்தியையும் அருளச் செய்தார். பிறகு, கச்சன் சுக்ரரைக் கொன்று கொண்டு வயிற்றிலிருந்து வெளிவந்தான். வந்தவுடன், "மிருத ஸஞ்சீவினி"யை உபயோகித்துக் குருவையும் உயிர்ப்பித்து விட்டு வணங்கி நின்றான். குரு சீடனை அணைத்துக்கொண்டு பாராட்டினார்.

வந்த காரியம் கைகூடிய கச்சன் தேவலோகத்துக்குக் கிளம்பினான். காதலினால் பிழியப்பட்ட இருதயத்துடன், நீர்மல்கும் நயனங்களுடன் குரு புத்ரி அவனை நோக்கினாள். தேவேந்திரனுடைய ஆணையை மீற மறுத்துக் கச்சன் அவள் பிரேமையைத் திரஸ்காரம் செய்து புறப்பட்டான். தேவயானி அழுதாள்; மனம் புழுங்கினாள்; மன்றாடினாள். அவன் அசைய வில்லை. காதலின் வேகம், கடுங்கோபமாக மாறி நெருப்பைக் கக்கும் வார்த்தைகளாக வெளிப்பட்டது. "என் காதல் பலிக்காமல் போனது போல் நீ கற்ற வித்தையும் பலிக்காமல் போகும்!" என்றாள். வெறுங்கையுடன் திரும்பினான் பிரகஸ்பதி புத்திரன்.

தேவர்கள் பரமசிவனிடம் ஓடிச் சென்று, அவருடைய பாதங்களில் விழுந்து, அவரை மறந்து காலத்தையும் முயற்சியையும் வீணாக்கியதற்கு மன்னிப்பு வேண்டினார்கள். அவர் தயை கூர்ந்து, தேவயானியின் காதலை மெச்சி, அவர்களை மகாவிஷ்ணுவிடம் அனுப்பினார். பரந்தாமனும், தேவர்களுக்கு உதவி புரிய அமிருதம் கிடைக்கும் வழியைத் தேடினார்.

(7)

ஜானகி

கச்ச தேவயானி

1 கோரஸ்

ராகம்—பியாக் தாளம்—ஆதி

ஜய ஜய ஜய ஜய புருஹூதா—ஜய ஜய ஸகல புவன நாதா
ஜய ஜய அமரேந்த்ரா ஸசீபதி எனும் சாத சந்த்ரா (ஜய)

ராகம்—காபி தாளம்—ஆதி

இந்திராணி : நாதா நாதா சுரர் தொழும் பதனே
மாதவர் புகழும் வஜ்ராயுதனே

அரம்பையர் : விண்ணுலகா ளெண்டிசை அதிகாரா
வீரர் தொழும் தானவ ஸம்ஹாரா (ஜய)

ராகம்—கல்யாணி தாளம்—ஆதி

கோரஸ் : வெற்றிமாலை சூடுவோம் வேந்தனைக் கொண்டாடுவோம்

2 சுக்ராசாரி

ராகம்—சுத்த தன்யாசி தாளம்—ஆதி

சம்போ இந்த ஸஞ்சீவினி தன்னை—என்
அன்பனும் அசுர ராஜனுக் களித்தேன் (சம்)
இன்பம் தரும் இதன் பெருமையி னுலிவர்கள்
என்றும் உயிர் பெறவும் ஒன்று படவும் அருள் (சம்)

3 அசுரர்கள் கோரஸ்

(இந்துஸ்தான் மெட்டு)

கருணை மிகுந்த குருநாத னருளிருக்க
மேதினிதனி லொருக்காலே
நமக்கேது அமரர் பயம் மேலே (கரு)
ஈரெழு லோகமும் சென்றிடுவோம்
இமையோர் குலம் வேற வென்றிடுவோம்
எண்டி சாதிபர் நடுநடுங்கவுமவர்
எங்கு பதுங்கிடினும் கொன்றிடுவோம்
எங்கும் நமக்கெதி ரிலையே
புகழ்வோம் மகிழ்வோம் ஜயமே (கரு)

தீன · தீன்

4 அசுரர்கள் கோரஸ்

(இந்துஸ்தான் மெட்டு)

ஸஹபரஷ் இனிமேல் வானவர்கள்
உலகமே தவிடுபொடி (ஸ)

நமதுயர் குலபதி சுக்ரனெனும்
நிகரற்ற மஹாகுரு நாதனும்—பக
வான்புகழ் பாவி பாடுவமே (ஸ)

அமரேந்திரன் குடலைக் கிழித்திடுவோம்
அவன் தாங்கிய மணிமுடி பறித்திடுவோம்
ஸுரர் மதம் சிதைந்திட புடைத்திடுவோம்
ஸரர் நிலை கலங்கிட அடித்திடுவோம்
ஸுரர் குடல் நடுங்கிட தகர்த்திடுவோம்
ஜயமுடன் பணிந்தடி வணங்குவோம்
தான வேந்த்ரனையே பாடுவமே (ஸ)

5 அசுரர்கள் பூஜை கோரஸ்

(நாமாவளி மெட்டு)

சங்கரா சதாசிவ — சங்கடந் தவிர்த்தவா (சங்)

பங்கி லொரு பெண்ணுடையாய்—பாங்குள முக்கண்ணுடையாய்
கங்கைமதி மாசடையாய்—சங்கரனே எம்முடையாய் (சங்)

ஆல அமுது உண்டவனே—மாலை தலை பூண்டவனே
காலனுயிர் கொன்றவனே — கயிலை மலை ஆண்டவனே (சங்)

அஞ்சலென்று எங்களுக்கே — சஞ்சீவினி தந்ததற்கே
தஞ்ச முன்றன் பொன்னடிக்கே — நஞ்சணிந்த நீலகண்டா (சங்)

6 கச்சன்

விருத்தம்

உண்மையுடன் ஊக்கமிக உயர்குருவை யணுகி
திண் மையுறும் உயர் பிரும்ம சரிய நிலை சென்று
விண் மருவும் உம்பர்துயர் தீரமிகு மந்த்ர
வண்மை யுறு சித்தியொடும் ஈண்டுவர அருள்வீர்

7 தேவயானி

ராகம்—நாட்டைக் குறிஞ்சி தாளம்—ஆதி

பார்க்கப் பார்க்கத் திகட்டுவதுமில்லை குளிர்
பசுஞ் சோலை ஆனந்த நீரோடை (பா)
தீர்க்குமா நோயும் குயில்கள் கானம்
ஆடும் தோகை மயில்களி னலங்காரம்
ஸரிஸஸ நித நிஸநிநிதம மமகஸ
ஸகஸநி தநி ஸமமகமக மநிதநி
ஸரிகம ரிஸ நிரிஸநி ஸநிதப தநி
ஸதபம கமப கரிஸ மக மநிதநி (பா)

8 மதனசுரன் K.M.T

விருத்தம்

காயாத கானகத்தே நின்றுலாவும் என் காதலியே
மேயாத மானே, புள்ளி மேவாத மானே,
துள்ளி ஓடாத மானே, தோகை மானே,
ஓயாது என் மனதுக்குள்ளிருந்தே உவகை தரும் உயர்ந்த மானே
வாயாரவே உனை வாழ்த்தி மதனசுரனுன் வணங்கினேனே.

(பாட்டு)

தேடிவந்தேனே தேவயானி
மோடி செய்யாதே பணிந்தேனே நானே (தேடி)
தீரமான குரலொடு ஒருதரம் தாறுமாறு
மொழிகளை உரையாடி (தேடி)
தீன கருணைகரியே எனதாசை தேவயானியே
சீனி சக்கரைக்கட்டியே வா—சீக்கிரத்தினில் ராணியாவாய்
ஞானிகள் மனம் விரும்பும் தேவயானியே.

9 கச்சன், தேவயானி, மதனசுரன்

ராகம்—பந்துவராளி தாளம்—ஆதி

பூமியினெழில் புகலவு மேதரமா
மாமலர் வனம் பலமலைகளும் சீர்நிறை
குளங்களும் காண மகிழ்ச்சி தரும் (பூமி)

வானுறவளர் தரு இடையினில் அருவிகள்
சலசல வெனும் ஒலி யொடு பாய
சாந்த நன்முனிவர்கள் உறை தவச்சாலை
பூஞ்சோலை, நிறை தாணிக் கெதிரில்லையே (பூமி)
என்னருகே நீவா—அன்னமே
அன்னமே இங்கே வா—என்னருகே (என்)
என்னை நீ ஏமாற்றாதே இங்கே வா வா (என்)
தாமரை மலரதில் வளர் தகதகவென ஒளிர்சிறை (அன்னமே)
நீ தனித்து இந்த கானில் வாழுவது
ஸதா துன்பமினி என்னுடனே வா
சூரிய லோக முடிசூடு வேன்
சாஸ ராணியென அமருவாய் (என்)

10 கச்சன்

ராகம்—மோகனம் **தாளம்—ஆதி**

வனராஜ குமாரி—மனமோஹன நாரீ (வன)
மாங்கனியே மயிலே
தீங்குயிலே கிளியே
தேனினுமினிய பெண்
மானே மதுரமொழி (வன)

11 கச்சன்

ராகம்—பேகடா **தாளம்—ஆதி**

அருள் சுரக்கும் மெய்க்குரு வென நானே — திரு
வடி அடைந்தேன் சுக்ர பகவானே (அருள்)
பரமகருணை நிதி உமது கடைக்கண்
பார்வை கிடைப்ப துயர் பாக்ய மல்லவோ (அருள்)
இஷ்ட அசுரர்கள் வணங்க வருள் அன்பர்க்
கிஷ்ட சித்தி தரும் கலைக்கடலே
சிஷ்டர் பணியும் நவக்ரஹ வேந்தே—உன்
திருவுளம் இரங்கி என் மனயிரு ளகலமெய்
அருள் சுரந்த மெய்க்குரு உம்மை நானே
ஒரு பொழுதும் மறவேன் சுக்ர பகவானே

12 கச்சன்—தேவயானி

(இந்துஸ்தான் மெட்டு)

ப்ரேமையே ஜகம்—ப்ரேமையே சுகம்
ப்ரேமையே ஸன்மார்க்கம்—ப்ரேமையே ஸ்வர்க்கம் (ப்ரே)

நேமி சூழ்ந்திடும் பூமி வாழ்விலே
நெஞ்சகம் தனில் வஞ்சகம் இலா (ப்ரே)

ஜகமேலே— எது போனல் என்னே என்னே ?
எது வந்தால் என்னே என்னே ?
மெய்க்—காதல் ஒன்றிருந்தால் (எது)

இவ்வுலக சிந்தனை எது
தன் உள்ளில் அச்சம் எது (எது)

தெய்வக் காதலை யார் தடை செய்வார்
நிஜ அன்பிற்கும் தாளுண்டோ
தாணியதில்—கன நிதியும்
தவ யோகம் யாவும் இதுவே மெய்க் (காதல்)

பாரினிலே மனமொன்று கலந்து
நீரும் பாலும் போலே
சேரும் வாழ்வே ப்ரேமை யலாது
எல்லாம் வீண் ப்ரமைதானே மெய்க் (காதல்)

13 கச்சன்

ராகம்—முகாரி தாளம்—ஆதி

புள்ளிமானே புல்லையே—உண்ண
மனமே இல்லையோ—புள்ளி (மானே)

மெள்ள விழிசுழல அஞ்சும் இளம்பெண்
பிள்ளை என மருண்டு துள்ளி ஓடும்—புள்ளி (மானே)

பாவையர் நிகர்ஒளி பார்வையி லென்மேல்
கோபமோ என்ன மனஸ்தாபமோ—ம்ருதுகுண (மானே)

14 தேவயானி

(இந்துஸ்தான் மெட்டு)

இருண்ட வாழ்வில் குதூஹலம் தந்தாடும் மயில்கள் (இரு)

மனோஹர மதாய்—எழிசை யோடும்
கூகூ கூ—கோகிலம் பாடும்
தேனை யுண்டு வண்டுகளும்
மண மல்லிகையே சண்பகமே தாழாய் (இரு)
மாமர மீது கண்களும் குளிர
தாவி வளர்ந்த காவில் மலர்ந்தே
மென்கொடி தன்னில் மன்னுயிர்கள் (இரு)
இன்ப மோடன்பு கலந்த
கந்தம் மிஞ்சும் பூவே (இரு)

15

மதனசுரன்

(பாட்டு)

மனமோ கன மானேன்
மதனசுரன் நானே எனதொரு (மன)
என்னமோ உனைப்பார்த்த நாள்முதல்
எலுமிச்சம் பழம் புளிக்குது
எழில் வேப்பம் பழ மினிக்குது (மன)
ஒருநாள் ஒருபொழு தொருதா மாகிலும்
உன்னை மணக்க வேண்டும்—இந்த
உடம்பு கடைத் தேற (ஒரு)
வெறு நாளாகவே வெகுநாளை யந்தோ
வீணில் கழித்தேன் முத்து-மாணிக்கமே உலகில் (ஒரு)
புளிய மரம் நீஎனக்கு—புல்லுருவி நானுனக்கு
ஒளிபொருந்தும் சூர்யலோகம்—உடனே போவோம்
வாடி பெண்ணே

16

தேவயானி

ராகம்—தேச்

தாளம்—ஆதி

நறுமண மிகுமலரே உனது மகிமை
நலமது நானும் நயந்திடுவேனே (நறு)
என் மனமதும் உன்போல் மலரும் தினமும்
மணம்பெறும் காலமும் வருமோ நீசொல் (நறு)

17

கச்சன்—தேவயானி

ராகம்—காபி

தாளம்—ஆதி

ஸரஸம் செய்யவோ வந்தனை—சதி
காரி நீ என்னுடனே இங்கும் (ஸர)

பரமானந்தம் இங்கிதுவே
மட மாதர் மெய்யன் பல்லவோ—பூவில்
மாந்தர்க்கு மங்கள தீபம் (பர)
ப்ரேமையும் நம் கையிலடங்காது— நிஜ (ப்ரே)
தடை யேதிதற்கு — காவலேதிதற்கு—
கட்டுக் காவலேதிதற்கு (ப்ரே)
ஊனுடல் கலந்து உயிர்க் குள்ளிலூறுமே (பர)
உரிமையு மில்லையா — உரிமையு மில்லையா
மறைப்பவன் மூடனன்றோ
உள்ளக் கிடையை விட்டுச் சொல்ல
எனக்குத் தனி — (உரிமையு மில்லையா)

18 அசுரர்கள் கோரஸ்

இவனுக் கெத்தனை திமிர் அற்பப் பயலே
உயிரோ டினிமேல் இங்கு விடுவதோ (இவ)
கனஸஞ்சீவினி முதலாம் நிதியை
களவுசெய் திருடன் உளவறி முரடன் (இவ)
எமது புனித ஸத்குருவை வஞ்சனை
புரியும் மடையா கபட வேஷமோ
அமர லோகம் நீ அடைவதில்லை — இனி
அதல பாதலம் விழுந்து மடிவையே.

19 தேவயானி

K·M·T

ராகம்—பிலஹரி **தாளம்—ஆதி**

பரம க்ருபாநிதே — பார்வதி ரமணா (பரம)
ஸரஸிஜ மலர்ப்பாதம் — ஸ்மரிப்பேன் நான் அநுதினம் (பரம)
பன்னக பூஷணா — பக்தஸம் ரக்ஷணா
பவபயஸாகரா — தரண சுகுணகண (பரம)
பாதரிஸ பதபககா - ரீகஸநீ ஸநிதபஸா
ரிஸநிதகா பமகரிதா ஸநிதபரீ நிஸதநிபா
ஸஸஸா பபபா தநிபா மகரீ ரிகதா மகரிஸநிப தரிஸா
பாஸா ரீ கா மகரிஸ்நிதபா மகரிஸ ரிகபத ஸா

20 கச்சன்

(இந்துஸ்தான் மெட்டு)

மகிமை என் சொல்லுவேன்—ஈசனே
அகில லோக பாலா—ஹரனே (மகி)

மகிதலத்திலுன்னடியார், என்னாளும்
மனம் வருந்திடா தருள் தருவோனே
ஜகதீசா சர்வேசா—உன் (மகி)
அருளால் ஏழை நானே உய்ந்தேன்
அன்பும் தங்கும் நின் (அரு)
பாரினில் பசுபதி பார்வதி நாதன்
பங்கஜ பதமே பூஜை செய்வோனே
அகளங்க என்றன் நாதவி போ—நின் (அரு)

21 தேவயானி—கச்சன்

ராகம்—மத்யமாவதி

விருத்தம்

அன்பறியா ஆடவர் இரும்பு
நெஞ்சை ஏன் படைத்தாய்—ஈசா
இன்பக்குயிலே இவர்க்குள் ஒரு
விதிவிலக்கும் இல்லையோ

(பாட்டு)

போதுமையா இந்த மாயம்—அன்றே
புரிந்தது உங்கள் ஸம்ப்ர தாயம் (போது)
மாதரை நெஞ்சினில் ஈர மில்லாமலே
வஞ்சகமாக கொஞ்சும் நாடகம் (போது)

22 தேவயானி—கச்சன்

(இந்துஸ்தான் மெட்டு)

அவனியிலாடவர் உள்ளமே—வைரமதோ!
மயங்கு மடவார் பேதையரே
கனிந்த மதியார் கோதையரே (அவ)
கனி மொழி மதுர உதார குணவதி
உனதுளமறியா சிறுமதியேனே
இனி யொருபிழை புரியேன்
மனமிரங்காய் ப்ரிய பாமினி
யானினி எவ்விதம் நம்புவதுமது,
இரும்பு நெஞ்சம் நினைந்தஞ்சும்
கொஞ்சு மிளங்குயில் கோமளமாதே—
குமரி நீ பொறுப்பாயே (மன)

23 அசுரர்கள் கோரஸ்

(இந்துஸ்தான் மெட்டு)

பானையிலே பனஞ்சாறே—பனி
பதனி கூட்டிச் சேரே
தேனெடுத்ததிலே சேர்த்திடுவோம்
மாமதுவே சுகமாமே—மெய்
மறந்து பாடலாமே
தணித்துப்பறி—திராக்ஷபறி—இனிக்குதடீ
திராக்ஷயிலே புளிப்பேது—இதை
த்ராவக மாக்கவே வேது—துளி
கசகசாவும் குங்குமப்பூவும் கலந்து போடு
காச்சின பின்பதம் பாரு—கனி
ரஸங்கள் கெட்ட தெனத்தேறு
ஆாமு திதுவாமே—அள்ளியே கொடுப்போமே
அருளுருவுக்கே, ஞான குருவுக்கே, பானம்
குருவுக்கே அள்ளியே கொடுப்போமே (பானை)

24 நாரதர்

ராகம்—மாயாமாளகௌளை தாளம்—ஆதி

யாவும் மன மோஹமே—(சுகம்) நிலை
யேது கனவே நிகர் வாழ்வில் (யாவும்)
ஜீவ ஜாலங்கள் மாயமாய்
மாயும் தினந்தோறும்—அதனால் (யாவும்)
பாரினில் நமது எண்ணம் போலே
ஒன்றும் நடவாதே—பெருக் காற்றின்
ஓரம் நின்றமரம் நர சரீரம்
லோகநாதன் பேரருள் இல்லாவிடில் (யாவும்)

K·M·T

25 அசுர டான்ஸ்—கோரஸ்

(இந்துஸ்தான் மெட்டு)

அரிதரிதே பானமிதை வானுல கோரும்
அருந்தாத விருந்தான சுரபான வாரியே (அரி)
மடக்கு மடக்கென்றே குடிக்கக் குடிக்கவே
திகட்டாது குமட்டா துயர்ந்த திராக்ஷா ரஸம்

26 சுக்ராசாரியார்

ராகம்—ஆரபி தாளம்—ஆதி

பார்வதீ பதியே உனதம்புஜ
பாதமென்றன் துணை ஹரனே — ஸ்ரீ (பார்)

ராகம்—சுத்த லலிதா தாளம்—ஆதி

சகல பாபஸம்ஹாரா — யோகிஜன
ஸகஜானந்தா — சம்போ (சகல)
ப்ராணுபாய மென்ருலும் பாவனனே — உன்
பங்கமில் மந்த்ரம் பகர் வேன் கதி நீயே (சகல)

27 சுக்ராசாரியார் — கச்சன்

ராகம்—கமாசு தாளம்—ஆதி

ஈசா கயிலாசலம் வாழ் ஜகதீசா
மா லோன் அயன் பணி பர (மேசா)
ஸ்ரீசங்கரா - நின் திருவருளாலே சிறியோம்
உயிர் வாழ்வும் மகிழ்வும் கொண்டோம்
நாதா, ஸகல ஸுரா ஸுரர்கள் பணியும்
பாதா, மரகத வடிவு கொள் உமையவள்
மாதா, மருவு மிடது புரமு முடைய
ஜோதி, பவள கிரியை நிகரும் தவள
பூதி, யணியும் சிவ பூத கணம் பணியும்
வேத நுத சாமவேத கீதப்ரிய நாத
விநோத நமோ கருணு கரா
நளின மலர்த்தாளை கனவிலும் மறவோம் (ஈசா)

28 தேவர்கள் — கோரஸ்

ராகம்—சங்கரா தாளம்—ரூபகம்

சங்கரா ஸ்ரீபுரஹரா பார்வதி நாயக (சங்)
நின் பெருமையை மறந்தனம் திசைதிசை திரிந்தனம் (சங்)
திங்கள் சூடும் வேணி ஹரா ! நின்
காருண்யம் மதியாதே
பேதைகள் செய்பிழை நீ பொறுத்
தருள் சிவ னே கைலா சே சா (சங்)
நின் செயலன்றி ஓரணுவும் அசைவதேது
நித்யானந்த ப்ரகாச சுகமருள் மஹேச (சங்)

சுபம்

ஆனந்த விகடன் பிரஸ், மதராஸ். 25 M-April 1941—J 79

கச்ச தேவயானி

ஒளிப்பதிவு : கமால் கோஷ். உதவி : ஸி. வி. ராமகிருஷ்ணன்.
ஒலிப்பதிவு : இ. ஐ. ஜீவரத்னம் உதவி : கே. மணவாளன்.
பாடல்கள் ஒலிப்பதிவு: ஸி.இ.பிக்ஸ் உதவி : காந்தி.
ஸ்டில்ஸ் : எம். ஸி. அபூபக்கர். எடிட்டர் : ஆர். ராஜகோபால்.
ப்ரோஸஸிங்: ஸரஸ்வதி ஸினி லாபெரடரி
ஆர்ட் டைரக்ஷன் : ஓ. ஆர். எம்பாரய்யா.
மேக்கப் : ஹரிபாத சந்த்ரா. உதவி : கோபால்ராவ் & கே. சோமு
புரொடக்ஷன் அஸிஸ்டெண்டுகள்: ஆர். ஜகதீசன் & வத்ராப் சீனு

ஸ்டுடியோ:

வேல் பிக்சர்ஸ், கிண்டி

இப்படத்தின் முக்கிய பாடல்களை ஓடியன்
: ரிகார்டுகளில் கேட்டு மகிழுங்கள் :

நடிக நடிகைகள்

கச்சன்	கொத்தமங்கலம் சீனு
சுக்ராசாரியார்	வித்வான் சீனிவாசன்
நாரதர்	மாஸ்டர் ராஜகோபால்
விருஷபர்வா	எஸ். ராமச்சந்திரய்யர்
மதனுஸூரன்	கொத்தமங்கலம் சுப்பு
சிஷ்யர்கள்	ஸி. என். ஸதாசிவய்யா & பி. ஆர். ராஜகோபாலய்யர்
குக்குடாசுரன்	ராமானுஜாச்சாரியார்
தேவேந்திரன்	ஆர். எஸ். ராமஸ்வாமி ஐயங்கார்
ப்ரஹஸ்பதி	தஞ்சாவூர் மணி அய்யர்
பரமேச்வரன்	பி. ராஜகோபாலய்யர்
தேவயானி	டி. ஆர். ராஜகுமாரி
ஸிம்ஹாஸினி	கே. நாகலக்ஷ்மி
இந்த்ராணி	டி. எஸ். ராஜம்மாள்
சர்மிஷ்டா	வி. ஸூப்புலக்ஷ்மி

இன்னும்

ஸி. வி. ராமச்சந்திரன், ஸாம்பமூர்த்தி ஐயர், விட்டல் ராவ் முதலியோர்.



வருகிறது!

வத்ஸலா — பேபி ஸரோஜா — ஜி. சுப்புலக்ஷ்மி

காமதேனு